# தூத்துக்குடி நகரமன்றம்
# சாதாரணக் கூட்டப்பொருள்

2008ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10. 00 மணிக்கு 1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அட்டவணை III விதி எண் 2(1)ன் கீழ் தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

1. தூத்துக்குடி நகருக்கு குடிநீர் வழஙகக்கூடிய ஒரே குடிநீர் ஆதாரமான வல்லநாடு தலைமை நீர் பணியிடத்திலிருந்து நகருக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக பழைய திட்டத்தில் (Scheme-I) பொருத்தப்பட்டுள்ள தற்போது இயக்கிட உத்தேசித்துள்ள 175 கு.வேக திறன் கொண்ட பழைய மின் மோட்டார்கள் இரண்டு எண்ணம் நீண்ட நாட்களாக இயக்கத்தில் இல்லாததாலும், காற்றின் ஈரப்பதத்தாலும் மேற்படி மின் மோட்டார்களின் காயில் பழுதாகி இயஙகாத நிலையில் உள்ளது. காயில் புதுப்பித்து இதர பழுதுகள் சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ 1,25,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

நகஎண் 012749/இ1/08

**தீர்மானம் எண்: 318**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

2. இந்நகராட்சி பகுதி சஙகராபுரம் பகுதியில் உள்ள பகிர்மானக் குழாய் சேதமடைந்து குடிநீர் விநியோகம் சீரான முறையில் நடைபெறாமல் இருக்கிறது. எனவே மேற்கண்ட பகுதியில் பிவிசி குடிநீர் குழாய் புதியதாக மாற்றியமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 30000/—க்கு (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 20/2008—09

**தீர்மானம் எண்: 319**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

3. இந்நகராட்சிப் பராமரிப்லுள்ள தெற்கு சம்பந்தமூர்த்தி தெருவில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் உயர்த்தி கட்டுதல் சிறுபாலம் அமைத்தல் போன்ற பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ 1,65,000/— க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 17/2008—09

**தீர்மானம் எண்: 320**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

4. இந்நகராட்சிப் பராமரிப்பிலுள்ள அழகேசபுரம்1, சுந்தரராமபுரம், நந்தகோபாலபுரம், நடராஜபுரம் ஆகிய தெருக்களில் புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டவும் மேலும் மழைநீர் வடிகால் உயர்த்தி கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 3,85,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 19/2008—09

**தீர்மானம் எண்: 321**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

5. இந்நகராட்சி பழைய பேரூந்து நிலையத்தில் உள்ள தெருவிளக்குகளை மின் ஏற்றத் தாழ்வினால் பாதிப்பு அடையாமல் இருக்க தனி மின் இணைப்பு பெற்றுக்கொள்ளவும், புதிய பேரூந்து நிலையத்தில் வாகனஙகள் நிறுத்தும் இடத்திற்கு தனி மின் இணைப்பு பெற்றுக்கொள்ளவும் ஆகும் செலவீனம் ரூ 9000/—க்கும் மின் வாரிய செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

மபஎண் இ3. 11398/2008

**<u>தீர்மானம் எண்: 322</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி அளிக்கப்பட்டது

6. இந்நகராட்சிப் பகுதிக்குட்பட்ட பாளையங்கோட்டை ரோடு, ஜெயராஜ் ரோடு, பாலவிநாயகர்கோவில் தெரு, புதுக்கிராமம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பாதாள சாக்கடைக் குழாய்கள் அடைபட்டதால் மேன்ஊேறால்கள் உடன் திறந்து அடைப்பு சரிசெய்ய வேண்டி அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ் நகராட்சி பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர் திரு ஜி. பார்த்தீபன் என்பவரால் பணி செய்து முடித்ததற்கும் அதற்கான செலவினம் ரூ 53326/– மேற்கொண்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** பதிவு செய்யலாம்

மபஎண் 12/2008–09

**<u>தீர்மானம் எண்: 323</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

7. தூத்துக்குடி நகர்ப்பகுதி வண்டிமரிச்சம்மன் கோவில் தெருவில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் செல்லாததால் அவ்விடத்திலுள்ள மேன்ஊேறால்கள் திறந்தும் அடைப்பு செய்யும் பணியினை உடன் செய்ய வேண்டி நகராட்சி சட்டவிதி எண் 15–ன் கீழ் நகராட்சி பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர் திரு ஜி. பார்த்தீபன் என்பவர் மூலம் உடன் பணியினை செய்து முடித்ததற்கும், அதற்கான செலவினம் ரூ 37,944/– மேற்கொண்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப் படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** பதிவு செய்யலாம்

மபஎண் 7/2008–09

**<u>தீர்மானம் எண்: 324</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

8. தூத்துக்குடி நகராட்சி ராஜாஜி பூங்கா நீரேற்று நிலையத்திலிருந்து சுப்பையா பார்க் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிக்கு பம்பிங செய்யவும் 400 எம்எம் பிஎஸ்சி மெயினில் விரிசல் ஏற்பட்டதால் குடிநீர் விநியோகம் பாதிப்பு ஏற்பட்டது. அதனை உடன் சரிசெய்ய நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு ஜி. பார்த்தீபன் என்பவர் மூலம் பணியினை செய்து முடித்த செலவினம் ரூ 10,784/– மேற்கொண்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** பதிவு செய்யலாம்

மபஎண் 8/2008–09

**<u>தீர்மானம் எண்: 325</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

9. இந்நகராட்சிப் பகுதியில் 3வது மைல் பாலம் முதல் ராஜாஜி பூங்கா வரையுள்ள இடங்களில் அமைந்துள்ள கோரம்பள்ளம் நல்ல தண்ணீர் கால்வாய் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தக்கோரி அறிவிப்பு கொடுத்ததில் சர்வே வார்டு சி, பிளாக் 46, நகரளவு எண் 6ல் வசிக்கும் திருமதி இந்திராணி என்பவர் மேற்படி ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தக்கூடாது என தெரிவித்து மதுரை உயர்நீதிமன்றத்தில் M.P. (MD) No. 1/2008 in W.P. (MD) No. 4405/08 தொடர்ந்த வழக்கில் நகராட்சி ஆணையரை முதல் பிரதிவாதியாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை 2ம் பிரதிவாதியாகவும் திரு டி. திரவியம் என்பவரை 3ம் பிரதிவாதியாகவும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி வழக்கில் வழக்கு முடியும் வரை ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தக் கூடாது என தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞரை மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும், அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 12064/2008

**<u>தீர்மானம் எண்: 326</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

10. இந்நகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூங்கா நீரேற்று நிலைய அனைத்து மின் மோட்டார் மற்றும் பம்ப்களுக்கு தேவையான பியரிங்கள் மற்றும் GLR ல் உள்ள அனைத்து மின் மோட்டார் பம்ப்களுக்கு தேவையான பியரிங்கள் மோட்டார் பம்ப் கப்ளிங்கள் கிளாண்ட் ரோப்கள், கேபிள்

லெக்கன் வாஙக ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ 1. 40 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

இ3. 011987/08

**<u>தீர்மானம் எண்: 327</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

11. இந்நகராட்சி சுப்பையாபுரம் 5ம் தெரு சர்வே வார்டு 2, பிளாக் 33, நகரளவு எண் 3761ல் உள்ள ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்தக்கோரி டபிள்யூ பி எண் 2604/05 ல் தொடர்ந்த வழக்கு மற்றும் MD No. 195/05 வழக்கில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு அறிவிப்பு வழஙகப்பட்டு 30 தினஙகளுக்குள் ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த வேண்டும் என தீர்ப்பு வழஙகப்பட்டது. மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு அறிவிப்பு வழஙகப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதில் மேற்படி தாவா தொடர்பாக தஙகளுக்கு சாதகமாக தீர்ப்பு உள்ளது எனவும் நகராட்சி இதில் தலையிட இயலாது என தூத்துக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒஎஸ்எண் 2/91 வழக்கில் தீர்ப்பு வழஙகப்பட்டுள்ளது என ஆக்கிரமிப்பாளர்கள் பதில் தெரிவித்ததின் பேரில் மேற்படி பொருள் தொடர்பாக மதுரை உயர்நீதிமன்றத்தில் W.P. No. 1/07 in W.P. 2604/2005ல் தெளிவுரை கோரப்பட்டு அவிடவிட் தாக்கல் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இந்நிலையில் மேற்படி தீர்ப்பின்படி நடக்கவில்லை என மனுதாரர் மதுனந் என்பவர் மதுரை உயர்நீதிமன்றத்தில் C.P. No. 94/07 ல் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் வழக்கில் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினஙகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

ஜி1. 5168/2008

**<u>தீர்மானம் எண்: 328</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

12. இந்நகராட்சிக்குட்பட்ட நல்ல தண்ணீர் கால்வாய் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்த திரு திரவியம் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு W.P. (MD) No. 3415ல் நகராட்சிப் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகளை தீர்ப்பு பெற்ற இரண்டு மாதஙகளுக்குள் அப்புறப்படுத்த வேண்டுமென தீர்ப்பு வழஙகப்பட்டது. மேற்படி வழக்கு விபரம் நகராட்சிக்கு தெரிவிக்கப்படவில்லை. மனுதாரர் தெரிவித்த பின்புதான் மேற்படி ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி தீர்ப்பின்படி நகராட்சி எல்கைக்குள் உள்ள நல்ல தண்ணீர் கால்வாய் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தவில்லை என CP.No. 141/08ல் மதுரை உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மேற்படி நபரால் தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மதுரை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும், அதற்காகும் செலவினஙகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 2040/2008

**<u>தீர்மானம் எண்: 329</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

13. இந்நகராட்சி சொத்துவரி சீராய்வு பணிக்குத் தேவையான விஷேச சிறப்பு நோட்டீஸ் அச்சிட்டு விநியோகிக்க 30–5–2008ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட கூட்டுறவு நிறுவனஙகளிலிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வஎண் | நிறுவனத்தின் பெயர் | அசல் படிவம் 1க்கு | நகல் படிவம் 1க்கு |
|---|---|---|---|
| 1 | சிவகாசி அச்சுத்தொழில் கூட்டுறவு சேவை சஙகம்,<br>18 வடக்குத்தெரு, சிவகாசி | ரூ. 1. 15 | ரூ 1. 15 |
| 2 | இராமநாதபுரம் மாவட்ட அச்சக தொழில் கூட்டுறவு சேவை சஙகம்,<br>91, சேதுபதி வடக்கு தெரு,<br>இராமநாதபுரம் | ரூ 1. 10 | ரூ 1. 10 |

| | | | |
|---|---|---|---|
| 3 | சிதம்பரனார் மாவட்ட அச்சக தொழில் கூட்டுறவு சேவை சங்கம் 28இ, சித்தானந்தபுரம் 1வது தெரு, கோவில்பட்டி | ரூ 0.99 | ரூ. 0.99 |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் சிதம்பரனார் மாவட்ட அச்சக தொழில் கூட்டுறவு சேவை சங்கம் கோவில்பட்டி கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்கலாம்.
2. உத்தேச செலவினம் ரூ 1. 80 இலட்சத்திற்கு அனுமதிக்கலாம்.

அ1. 24425/07

**தீர்மானம் எண்: 330**

அலுவலகக் குறிப்பு 1 ஏற்கப்பட்டது
அலுவலகக் குறிப்பு 2 அனுமதிக்கப்பட்டது

14. இந்நகராட்சிக்கான வாகனம் டிஎன் 69– 5735 குடிநீர் லாரியின் தகுதிச் சான்று காலம் முடிவடைய இருப்பதால் தேவையான பழுதுநீக்கம் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச் சான்று மீண்டும் பெற வேண்டும். இதற்கான செலவீனத்திற்கு மன்றம் தனது தீர்மானம் எண் 387 நாள் 31–7–2007ல் அனுமதி அளித்துள்ளது. விலைப்புள்ளிகள் 28–5–2008ல் கோரியதில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

1. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங ஒர்க்ஸ் போல்பேட்டை, தூத்துக்குடி — ரூ 26,630/–
2. மெசர்ஸ் ஆர் என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ் சிதம்பர நகர், தூத்துக்குடி — ரூ 25,050/–
3. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ், கால்டுவெல்காலனி,தூத்துக்குடி — ரூ 28,250/–

**அலுவலகக் குறிப்பு**

குடிநீர் விநியோக வாகன அவசியம் கருதி ரூ 25,050/– க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஆர்என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

இ1. 6498/2008

**தீர்மானம் எண்: 331**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

15. இந்நகராட்சிக்கு சொந்தமான அனைத்து குடிநீர் நீரேற்று நிலையங்கள் மற்றும் கழிவுநீர் நீரேற்று நிலையங்களிலும் பயன்படுத்த தேவையான கிரிமிங டூல் மற்றும் கிளாம்ப் மீட்டர் கிளவுஸ் வாங்கிட ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ 13100/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

இ3. 11106/2008

**தீர்மானம் எண்: 332**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

16. இந்நகராட்சி 26வது வார்டு பகுதிக்குட்பட்ட விளம் கோவில் தெரு, கருப்பசாமி கோவில் தெரு, முத்து தெரு, சுப்புத்தெரு, காமாட்சியம்மன் கோவில் தெரு பகுதிகளில் குடிநீர் குழாய்களில் கழிவுநீர் கலந்து வருவதாக புகார் வந்ததின் பேரில் அவ்விடத்தில் குடிநீர்க் குழாய் சரிசெய்யும் பணி செய்ய நடவடிக்கை மேற்கொண்ட பொழுது மேற்கண்ட குழாய்கள் சுமார் 50 வருடங்களுக்கு முன்னால் போடப்பட்ட குழாய்கள் ஆனதால் அந்த குடிநீர் பைப்புகளை அகற்றி புதியதாக 110எம்எம் பிவிசி குழாய்கள் மாற்றி அமைத்து சீரான குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. அதற்கான மதிப்பீடு ரூ 6,60,000/– மதிப்பீட்டில் மேற்கண்ட பணியினை செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

மபஎண் 16/2008–09

**தீர்மானம் எண்: 333**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

17. இந்நகராட்சிக்கு சொந்தமான டிஎன் 69– 5052 கழிவுநீர் லாரியின் தகுதிச் சான்று காலம் முடிவடைவதால் தேவையான பழுது நீக்கம் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில்

தகுதிச் சான்றிதழ் பெற்ற பின் சாலையில் இயக்க முடியும். இதற்கான செலவீனத்திற்கு மன்றம் தனது தீர்மானம் எண் 387 நாள் 31–7–2007ல் அனுமதி அளித்துள்ளது. அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து 25–4–2008ல் விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

1. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங ஒர்க்ஸ் போல்பேட்டை, தூத்துக்குடி — ரூ 27,750/–
2. மெசர்ஸ் ஆர் என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ் சிதம்பர நகர், தூத்துக்குடி — ரூ 32,650/–
3. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ், கால்டுவெல்காலனி,தூத்துக்குடி — ரூ 29,185/–

**அலுவலகக் குறிப்பு**

வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியாக ரூ 27,750/–க்கு கொடுத்துள்ள மெசர்ஸ் அய்யானர் ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங ஒர்க்ஸ் ,தூத்துக்குடி நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

இ1. 5081/2008

**தீர்மானம் எண்: 334**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

18. இந்நகராட்சிக்கு சொந்தமான டிஎன் 69– 9587 டிராக்டர் டிப்பர் டிரெய்லர் வாகனத்தின் தகுதிச் சான்று காலம் முடிவடைவதால் தேவையான பழுது நீக்கம் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச் சான்று பெற வேண்டும். இதற்கான செலவீனத்திற்கு மன்றம் தனது தீர்மானம் எண் 387 நாள் 31–7–2007ல் அனுமதி அளித்துள்ளது. அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து 23–4–2008ல் விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

1.. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ், கால்டுவெல்காலனி, தூத்துக்குடி — ரூ 20510/–

2. மெசர்ஸ் ஆர் என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ் சிதம்பர நகர், தூத்துக்குடி — ரூ 17520/–

3. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங ஒர்க்ஸ் தூத்துக்குடி — ரூ 19470/– .

**அலுவலகக் குறிப்பு**

மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து வரப் பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியாக ரூ 17,520/–க்கு கொடுத்துள்ள மெசர்ஸ் ஆர்என்ஆர் மெக்கானிக்கல் ஒர்கஸ் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

இ1. 4794/2008

**தீர்மானம் எண்: 335**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

19. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 31–12–2007ல் காலமான திருமதி வள்ளியம்மாள்/வேலாயுதம் என்பவரின் மாத ஊதியத்தில் ரூ 20/– வீதம் 148 மாதஙகள் பிடித்தம் செய்த சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 2960/– மற்றும் வட்டித்தொகை ரூ 2061/– ஆக மொத்தம் ரூ 5021/–ஐ அன்னாரின் கணவர் முருகன் என்பவருக்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** வழஙகலாம்

எச்2. 11978/08

**தீர்மானம் எண்: 336**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

20. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து ே 15–3–2008ல் காலமான திருமதி சந்தணமாரி/ஆண்டி என்பவரின் மாத ஊதியத்தில் ரூ 20/– வீதம் 144 மாதஙகள் பிடித்தம் செய்த சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 2880/– மற்றும் வட்டித்

தொகை ரூ 1035/– ஆக மொத்தம் ரூ 4915/–ஐ அன்னாரின் கணவர் ஆண்டி என்பவருக்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலகக் குறிப்பு</u>** வழஙகலாம்

எச்2. 12689/08

**<u>தீர்மானம் எண்: 337</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

21. இந்நகராட்சிக்கு சொந்தமான டிஎன் 69சி– 107 மினி டிப்பர் லாரியின் தகுதிச் சான்று காலம் முடிவடைய இருப்பதால் தேவையான பழுது நீக்கப் பணிகள் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச் சான்று புதுப்பிக்க வேண்டும். இதற்கான செலவீனத்திற்கு மன்றம் தனது தீர்மானம் எண் 387 நாள் 31–7–2007ல் அனுமதி அளித்துள்ளது. 11–6–2008ல் விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங ஒர்க்ஸ் போல்பேட்டை, தூத்துக்குடி — ரூ 38,000/–
2. மெசர்ஸ் ஆர் என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ் சிதம்பர நகர், தூத்துக்குடி — ரூ 36,250/–
3. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ், கால்டுவெல்காலனி,தூத்துக்குடி — ரூ 39,260/–

இவ்வாகனம் 11ம் ஆண்டு பராமரிப்பிற்கு ரூ 21,000/– மட்டுமே செலவு செய்ய அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. வாகனம் மினி டிப்பர் லாரி என்பதால் நகரின் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள அவசியம் தேவைப்படுவது ஆகும். எனவே அரசு அனுமதிக்கப்பட்ட தொகையை விட கூடுதலாக ஆகும் செலவுத்தொகைக்கு அரசின் பின்னேற்பு பெறவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மாநகராட்சியாக்கும் பணிகள் விரைவாக நடந்து கொண்டு இருப்பதால் பணிகள் மேற்கொள்ள வாகன அவசியம் கருதி கூடுதலாக ஆகும் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த விலைப்புள்ளி ரூ 36,250/–க்கு கொடுத்துள்ள மெசர்ஸ் ஆர்என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

இ1. 12844/08

**<u>தீர்மானம் எண்: 338</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

22. இந்நகராட்சிக்கு சொந்தமான TN 69-4278 கழிவுநீர் வாகனத்தின் தகுதிச் சான்று காலம் முடிவடைவதால் தேவையான பழுதுநீக்கம் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மீண்டும் புதுப்பிக்க வேண்டும். இதற்கான செலவீனத்திற்கு மன்றம் தனது தீர்மான எண் 387 நாள் 31–7–2007ல் அனுமதி அளித்துள்ளது. 11–6–2008ல் விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1.. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ், கால்டுவெல்காலனி, தூத்துக்குடி — ரூ 20620/–

2. மெசர்ஸ் ஆர் என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ் சிதம்பர நகர், தூத்துக்குடி — ரூ 18400/–

3. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங ஒர்க்ஸ் போல்பேட்டை, தூத்துக்குடி — ரூ 19610/–

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

பணியின் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி ரூ 18,400/– கொடுத்துள்ள மெசர்ஸ் ஆர்என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

இ1. 12845/2008

**தீர்மானம் எண்: 339**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

23. இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பில் புதிய தெருவிளக்குகள் பொருத்தப்பட இருப்பதால் தனியார் மூலம் பராமரிப்பிற்கு மன்றத்தால் தீர்மான எண் 214 நாள் 25–4–2008ல் அனுமதிக்கப்பட்டுள்ள 11 முதல் 16 வரையுள்ள வார்டுகளின் தொடர்ச்சியாக வார்டு எண் 10ல் உள்ள குழல் விளக்குகள் 110 சோடியம் ஆவி விளக்கு 3 எண்ணங்கள் பராமரிப்பு மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு**

1. பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வரும் சுதா இஞ்சினியரிங நிறுவனம் திருநெல்வேலி மூலம் செய்து கொள்ள அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் பணி ஆணை வழஙகி பராமரிப்பு பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ3. 016971/07/2

**தீர்மானம் எண்: 340**

அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது
அலுவலகக்குறிப்பு 2 அனுமதி அளிக்கப்பட்டது.

24. இந்நகராட்சி பணிகள் சம்பந்தமாக நகர்மனற் தலைவர் அவர்கள் 1–6–2008ல் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு சென்று வந்தமைக்கான பயணப்படி ரூ 2712/–ஐ வழஙக வேண்டி பயணப்பட்டியல் சமர்ப்பித்துள்ளார்கள். அவருக்கு அத்தொகையை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்**பு மன்றம் அனுமதிக்கலாம்.

பி4. 15069/2008

**தீர்மானம் எண்: 341**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

25. ஆணையர் அவர்களது உபயோகத்திற்கு உள்ள லேப்டாப் கம்யூட்டரில் இண்டர்நெட் வசதி ஏற்படுத்துவதற்கு ( TATA Rs. 325/-) திட்டத்தில் டாடா இண்டிகாம் நிறுவன தலைப்பு VSB Modem வாஙகி பொருத்துவதற்கு ஆகும் செலவினம் ரூ 2800/– மன்றத்தின் தகவலுக்கு வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1. யுஎஸ்.பி. மாடம் | ரூ 2500/– |
| 2. சிம்கார்டு | ரூ 100/– |
| 3. முன் வைப்புத்தொகை | ரூ 200/– |
| | ------ |
| | ரூ 2800/– |
| | -------- |

அலுவலகக் குறிப்பு 1. அனுமதிக்கலாம்

2. 2007–08ஆம் ஆண்டு 12வது நிதிக்குழு திட்ட சேமிப்பு நிதியில் செலவினம் செய்யவும் அனுமதிக்கலாம்.

இ1. 8655/08

**தீர்மானம் எண்: 342**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

26. இந்நகராட்சி கணனிகள் பிரிவிற்கு தேவையான கீழ்க்கண்ட உபகரணஙகள் டி.ஜி.எஸ்,&டி விலைவிகிதப்படி HCL Infosystems Limited நிறுவனத்தில் நேரடியாக வாஙகுவதற்கும் அதற்கான ரூ 69,900/– செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | DGS & D Rate |
|---|---|---|
| 1. Windows 2003 Server STD 32 BIT R2 ENGLISH MOLP WITH MEDIA MANUAL AND SA ( விண்டோஸ் சர்வர்) | 1 No. | 41,900/– |

2. HCL/ OEM RACKS ( 19 INCH 42V 800 MM DEPTH
(சர்வர் அலமாரி) 1No. 28,000/-

--------------

Total 69,900/-

--------

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதிக்கலாம்

2. செலவினத்தை 2007–08ஆம் ஆண்டு 12வது நிதிக்குழு நிதியில் மீதித்தொகையை செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

இ1. 8655/08

**தீர்மானம் எண்: 343**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

27. இந்நகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூஙகா நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள 25 குதிரை வேக திறன் மின் மோட்டாரின் காயில் சுற்றும் பணிக்கு 16–4–08ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில்கீழ்க்கண்ட இரண்டு நிறுவனத்தாரிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வஎண் | வேலை விபரம் | ஜாய் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ், தூத்துக்குடி | அசோக் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ், தூத்துக்குடி |
|---|---|---|---|
| 1 | 25 கு,வேக திறன் மின் மோட்டார் காயில் சுற்றும் பணி மற்றும் 2 எண்ணம் பியரிங மாற்றும் பணி | மதிப்பீட்டை விட 1. 54 % குறைவு | மதிப்பீட்டை விட 0. 39% குறைவு |

**அலுவலகக் குறிப்பு** பெறப்பட்டஇரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஜாய் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ் தூத்துக்குடி ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட குறைவாகவும் மற்றும் உள்ளூர் சந்தை நிலவரத்தையும் ஒத்துள்ளதாலும் இதனை மன்றம் அஙகீகரிக்கலாம்.

இ3. 4356/08

**தீர்மானம் எண்: 344**

அலுவலகக் குறிப்புப்படி அஙகீகரிக்கப்பட்டது

28. முன்னாள் ஒப்பந்தக்காரர் திரு ஜி. ராஜேந்திரன் என்பவர் பல்வேறு பணிக்காக நகராட்சி அலுவலகத்தில் முன் வைப்புத்தொகையாக செலுத்தியுள்ளார். அன்னார் செலுத்திய வைப்புத்தொகையை திரும்ப வழஙக கேட்டுள்ளார். மேற்படி வைப்புத்தொகை காலஙகடந்த வைப்புத்தொகை என்பதாலும், தணிக்கையில் ஆட்சேபணை இல்லை என்று சான்று பெறப்பட்டுள்ளதாலும் அத்தொகை ரூ 7050/–ஐ திரும்ப வழஙக மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மேற்படி தொகையை வழஙக தணிக்கை தடை ஏதுமில்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளதால் அதனை வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

பி3. 7798/2008

**தீர்மானம் எண்: 345**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

29. இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய புதிய லாட்ஜ்ஜில் இயஙகி வரும் உள்ளாட்சி நிதித் தணிக்கை அலுவலகத்திற்கு புதிய மின் இணைப்பு பெற ஆகும் செலவுத்தொகை (மின் வாரியத்தார்க்கு செலுத்த வேண்டிய தொகை) ரூ 1600/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

இ3. 11107/08

**தீர்மானம் எண்: 346**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

30. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரியும் திரு க. திருமால்சாமி என்பவர் தனது குடும்ப சூழ்நிலைக் காரணமாக மதுரை மாநகராட்சிக்கு

பணியிட மாறுதல் கோரி விண்ணப்பம் வழங்கியுள்ளார். திரு க. திருமால்சாமி, துப்புரவு ஆய்வாளர் மதுரை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதலில் செல்ல அனுமதிக்க வேண்டி அன்னாரின் விண்ணப்பம் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அன்னாரின் பணிமாறுதல் கோரும் விண்ணப்பத்தினை அனுமதிக்கலாம்.

எச்1. 13612/2008

**தீர்மானம் எண்: 347**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

31. இந்நகராட்சி வார்டு எண் 7, கிருஷ்ணராஜபுரம் 7ம் தெருவில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூராக உள்ள தெருவிளக்கு மின் கம்பத்தை மாற்று இடத்தில் மாற்றியமைப்பதற்கு ஆகும் செலவுத்தொகை ரூ 8390/– உதவி மின் பொறியாளர் விநியோகம்/நகர்புறம் தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

இ3. 23677/07

**தீர்மானம் எண்: 348**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

32. இந்நகராட்சிப் பகுதியில் வல்லநாடு தாமிரபரணி ஆற்றுப் படுகையில் இருந்து குடிநீர் பம்ப் செய்து வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம் மூலம் இந்நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள்.

1. இராஜாஜி பூங்கா மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி
2. மில்லர்புரம் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி
3. கலைஞர் பார்க் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி
4. குரூஸ்புரம் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி
5. வி.வி.டி,. பார்க் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி
6. பேபி ஊறாம் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி (தெற்கு காட்டன் ரோடு)
7. லெவஞ்சிபுரம் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி
8. தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி

ஆகியவற்றில் உள்ள குடிநீர் மாதிரி எடுத்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆய்வுக்கூடத்தில் குடிநீர் பரிசோதனை செய்து குடிநீர் தரச் சான்றிதழ் பெறப்பட்டதற்கும், அதற்கான கட்டணம் தொகை ரூ 2250/–ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம்.**

இ3. 9410/08

**தீர்மானம் எண்: 349**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

33. இந்நகராட்சிப் பகுதியில் செயல்படுத்தப்பட உள்ள பாதாள சாக்கடைத்திட்டம் சம்பந்தமாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பொதுமக்கள் பங்குத்தொகை மற்றும் வைப்புத்தொகை செலுத்தக் கோரும் அறிவிப்பினை அவசர அவசியம் கருதி சிதம்பரனார் மாவட்ட அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சொஸைட்டி, கோவில்பட்டி மூலம் அச்சிடுவதற்கும், அதற்கான செலவினம் தொகை ரூ 54,080/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம்.**

இ3. 11512/07

**தீர்மானம் எண்: 350**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

34. தூத்துக்குடி நகராட்சிப் பகுதியில் ரோச் பூங்கா அழகுபடுத்துவதற்கு மேம்பாடுகள் பணிகள் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 78. 00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. அரசு மானியம் 50 சதவீதம் நகராட்சி பஙகுத்தொகை 50% முதலீடு செய்து பணி செய்யலாம்.
3. மேற்கண்ட பணிகள் சுற்றுசூழல் துறை மூலமாக அனுமதி பெற்று பணியினை செய்யலாம். இ5. 14753/07

**<u>தீர்மானம் எண்: 351</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது

35. தூத்துக்குடி நகராட்சிக்கு பாத்தியப்பட்ட வடக்கு காட்டன் ரோடு கடை எண் 5, 6 மற்றும் 7க்கு வாடகை நிலுவை அதிகமாக இருந்ததால் அதன் உரிமத்தை ரத்துச் செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண் 585 நாள் 31–10–2007ல் ஒப்புதல் வழஙகப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி கடை உரிமம் பெற்ற உரிமம்தாரார் மேற்படி கடை வாடகை முழுவதையும் தீர்மானம் நிறைவேறு முன் செலுத்தி விட்டார். குத்தகைதாரர் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக மேற்படி கடையை நடத்தி வருவதால் இந்நகர்மன்ற தீர்மான எண் 585 நாள் 31–10–2007 தீர்மானத்தின் மீது நடவடிக்கையை நிறுத்தி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

நிலுவைத்தொகை முழுவதும் செலுத்தப்பட்டு விட்டதால் உரிமம் இரத்து செய்த தீர்மானத்தின் மீதான நடவடிக்கையினை நிறுத்தி வைக்க அனுமதிக்கலாம்.

அ16. 9676/07

**<u>தீர்மானம் எண்: 352</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

36. இந்நகராட்சிக்கு சொந்தமான மாவட்ட கருவூலம் இயஙகும் அலுவலகத்தில் மாடியில் UPS மாட்டுதலுக்கு தேவையான வயரிங மற்றும் புதியதாக எர்த் பிட் அமைத்தல் மற்றும் புதியதாக எர்த் பிட் அமைத்தல் மற்றும் கருவூலத்தில் உள்ள கணணிகளை மாட்டத் தேவையான சுவிட்ச் போர்டுகள், சுவிட்சுகள் மற்றும் தேவையான அனைத்து மின்சாதன பணிகளும் (மாடி முழுமைக்கும்) செய்து கொடுக்க ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ 55,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> மன்றம் அனுமதிக்கலாம்

இ3. 20599/07

**<u>தீர்மானம் எண்: 353</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

37. இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் இயஙகி வரும் மாவட்ட கருவூல அலுவலகத்தில் மாடியில் U P S இரண்டு எண்ணம் மாட்டுவதற்கு தேவையான வயரிங மற்றும் புதியதாக எர்த்பிட் அமைத்தல் மற்றும் கணனிகளை இயக்கத் தேவையான சுவிட்ச் போர்டுகள் சுவிட்ச்கள் அமைக்கும் பணிக்காக 11–6–2008ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனத்தாரிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வஎண் | பொருட்கள் விபரம் | ஏபிசி எலக்ட்ரிகல் அண்ட் பிளம்பிங மெட்டிரியல் தூத்துக்குடி | ஜாய் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ், தூத்துக்குடி |
|---|---|---|---|
| 1 | 7/20 காப்பர் பிளக்சிபிள் வயர் | ரூ 3100/ காயில் | ரூ. 3000/ காயில் |
| 2 | 3/20 காப்பர் பிளக்சிபிள் வயர் | ரூ 1700/ காயில் | ரூ.1600/ காயில் |
| 3 | 6 ஆம்ஸ் சுவிட்வ் | ரூ 16/ ஒன்றின் விலை | ரூ 15/ ஒன்றின் விலை |
| 4 | 6 ஆம்ஸ் சாக்கெட் | ரூ18/ ஒன்றுக்கு | ரூ17/ ஒன்றுக்கு |
| 5 | 63 ஆம்ஸ் 4 P எப்ஹெச் மெயின் சுவிட்ச் | ரூ4300/– ஒன்றுக்கு | ரூ4200/– |
| 6 | டுவின் ஜி.ஐ எர்த்திங | ரூ5300/– ஒன்றின் விலை | ரூ5200/– |
| 7 | 32 ஆம்ஸ் பியூஸ் கேரியர் | ரூ90/– ஒன்றின் விலை | ரூ85/– |

| | | | |
|---|---|---|---|
| 8 | 1" பிவிசி பைப் | ரூ30/– ஒரு லென்த் 10 அடி | ரூ25/– |
| 9 | 1" பெண்ட் | ரூ5/– ஒன்றுக்கு | ரூ4/– |
| 10 | 1" பேஷர் கிளாம்ப் | ரூ2. 50 | ரூ2. 00 |
| 11 | 12" x 12" போர்ட் | ரூ45 | ரூ44 |
| 12 | 3/4 " பிவிசி பைப் | 21/ ஒரு லென்த் | ரூ20/ ஒரு லென்த் |
| 13 | 12" x 4" போர்ட் | ரூ26/ ஒன்றிற்கு | ரூ25/ஒன்றிற்கு |
| 14 | 3/4 " பெண்ட் | ரூ3/ஒன்றின் விலை | ரூ2. 5 / ஒன்றின் விலை |
| 15 | 3/4 " பேஷர் கிளாம்ப் | ரூ2/ஒன்றின் விலை | ரூ1. 75 |
| 16 | இன்சுலேசன் டேப் ரோல் | ரூ8/ஒன்றின் விலை | ரூ7 |
| 17 | ஸ்குரூஸ் மற்றும் போல்ட் நட் (ஒட்டுமொத்த வயரிங செய்ய தேவையான அளவு) | ரூ300 | ரூ250 |

<u>அலுவலகக் குறிப்பு</u>

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ( 1 முதல் 17) அனைத்து இனஙகளுக்கு குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள மெசர்ஸ். ஜாய் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட குறைவாகவும் மற்றும் உள்ளூர் சந்தை நிலவரத்தை ஒத்துள்ளதாலும் இதனை மன்றம் அஙகீகரிக்கலாம்.

இ3. 20599/07

**<u>தீர்மானம் எண்: 354</u>**

அலுவலகக் குறிப்புப்படி அஙகீகரிக்கப்பட்டது

38. இந்நகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூஙகா நீரேற்று நிலையம் GLR நீரேற்று நிலையம் இவற்றிலுள்ள மோட்டார் பம்ப்களில் பயன்படுத்த தேவையான ஸ்பேர் பார்ட்ஸ் சப்ளை செய்ய 11–6–2008 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனத்தாரிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வஎண் | பொருட்கள் விபரம் | ஜாய் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ், தூத்துக்குடி ஒரு எண்ணத்தின் விலை | ஏபிசி எலக்ட்ரிகல்ஸ் அண்ட் பிளம்பிங மெட்டிரியல்ஸ், தூத்துக்குடி ஒரு எண்ணத்தின் விலை |
|---|---|---|---|
| 1 | பியரிங நம்பர் 6312 | 1880/ஒன்றின் விலை | 1890/ஒன்றின் விலை |
| 2 | பியரிங நம்பர் 6309 | 980 | 1000 |
| 3 | பியரிங நம்பர் 6308 | 620 | 630 |
| 4 | பியரிங நம்பர் NJ 307 | 3600 | 3700 |
| 5 | பியரிங நம்பர் 6310 | 1000 | 1050 |
| 6 | பியரிங நம்பர் 1206 K | 800 | 900 |
| 7 | 8 மி மி பேக்கிங ரோப் | 360/ கிலோ | 370/கிலோ |
| 8 | 10 மி.மி. பேக்கிங ரோப் | 360/ கிலோ | 370/ கிலோ |
| 9 | டேப் ரோல் | 40/ ரோல் | 50/ரோல் |
| 10 | டயர் கப்ளிங F. 70 | 900/ ஒன்றின் விலை | 1000 ஒன்றின் விலை |

<u>அலுவலகக் குறிப்பு</u>

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஜாய் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், தூத்துக்குடி ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட குறைவாகவும் மற்றும் உள்ளூர் மார்கெட் நிலவரத்தை ஒத்துள்ளதாலும் இதனை மன்றம் அஙகீகரிக்கலாம்.

இ3. 11987/08

**<u>தீர்மானம் எண்: 355</u>**

அலுவலகக் குறிப்புப்படி அஙகீகரிக்கப்பட்டது

39. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி தெற்கு ராஜாத்தெரு மற்றும் வி.இ. ரோட்டில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி பொது நிதியில் செய்ய 18–6–2008 அன்று

ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு ஜே. சுரேஸ் ஜெயக்குமார் | மதிப்பீட்டிற்கு ரூ 0.20% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு கே. பழனியப்பன் | மதிப்பீட்டிற்கு ரூ 0.23% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 146 தேதி 31–3–2008ல் ரூ 3,30,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.20% குறைவானதுமான திரு ஜே. சுரேஸ் ஜெயக்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 243/2007–08

**<u>தீர்மானம் எண்: 356</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

40. இந்நகராட்சி துப்புரவு பணியாளர் திரு . கன்னியப்பன் என்பவர் தனது மகளின் திருமணத்திற்காக திருமண கடன் தொகை ரூ 10,000/– வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார். இவ்விண்ணப்பத்தை நகர் நல அலுவலர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார்கள்.

இப்பணியாளர்க்கு இதற்கு முன்னதாக திருமணக் கடன் ஏதும் வழஙகவில்லை. அன்னார் 3–2–1987ல் துப்புரவு பணியாளராக 21 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறார். அன்னார் மாத ஊதியமாக பிடித்தஙகள் போக ரூ 4,732/– பெற்று வருகிறார். இவருக்கு திருமணக் கடன் வழஙகினால் திரும்ப செலுத்தும் தகுதி உள்ளது. மேலும் இவருக்கு பிணையாளராக திரு ராமகிருஷ்ணன் என்பவர் கையொப்பமிட்டுள்ளார். மேலும் திருமணக் கடன் பெறுவதற்காக உரிய சான்றுகள் அனைத்தும் இத்துடன் சமர்ப்பித்துள்ளார். எனவே இவருக்கு திருமண கடன் தொகை ரூ 10,000/–ஐ வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> மன்றம் அனுமதிக்கலாம்.

பி4. 24566/07

**<u>தீர்மானம் எண்: 357</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

41. தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி சட்டமன்ற மானிய கோரிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மாநகராட்சி ஆக்கப்படுவதன் நினைவு கூறும் வண்ணம் எழில்மிகு தோற்றத்துடன் நினைவுத்தூண் அமைக்கவும் அதற்கான மாதிரி வரைபடத்திற்கு அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறை அவர்களின் அனுமதி பெறுவதற்கும் அதற்கான பிரேரணை அனுப்புவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

இ1. 18217/08

**<u>தீர்மானம் எண்: 358</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

42. தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி சட்டமன்ற மானிய கோரிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து முதற்கட்ட நடவடிக்கையாக மாநகராட்சி மேயர் அஙகி, கொடி, செஙகோல் மற்றும் நாற்காலி ஆகியவை வாஙகுவதற்கான மாதிரிகள் பெற்று அரசு செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறை அவர்களின் அனுமதி பெறுவதற்கு பிரேரணை அனுப்புவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

இ1. 18217/08

**<u>தீர்மானம் எண்: 359</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

43) தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி சட்டமன்ற மானிய கோரிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள கீழ்க்கண்ட பூங்காக்களில் மேம்பாடு பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்கான மதிப்பீடுகளுக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வஎண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நகராட்சி சுப்பையா பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 2. 00 |
| 2 | நகராட்சி நேரு பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 4. 00 |
| 3 | நகராட்சி கக்கன் பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 5. 00 |
| 4 | நகராட்சி இராஜாஜி பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 12. 00 |
| 5 | குறிஞ்சிநகரில் பூங்கா அமைக்கும் பணி | 3. 00 |

அலுவலகக் குறிப்பு 1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ1. 18217/08

**<u>தீர்மானம் எண்: 360</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

44. தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி சட்டமன்ற மானிய கோரிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இந்நகராட்சிக்கு சொந்தமான பாளையஙகோட்டை ரோடு மாட்டுப்பேட்டை வார்டு 4, பிளாக் 21E, நகரளவு எண் 3468/1A & 2B1 இடத்தில் புதிய மாநகராட்சி கட்டிடம் மற்றும் மாமன்ற கூடக் கட்டிடம் கட்டுவதற்கான மாதிரி வரைபடம் அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறை சென்னை அவர்களின் அனுமதி பெறுவதற்கும் மேற்கண்ட பணிகள் செய்வதற்கான நிதி ஒதுக்கீடு கோரி பிரேரணை அனுப்புவதற்கும் மாதிரி வரைபடம் தயார் செய்வதற்கான செலவினஙகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 21218/05

**<u>தீர்மானம் எண்: 361</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

45. இந்நகராட்சிக்கு சொந்தமான TN 69- 5719 கழிவுநீர் லாரியின் தகுதிச் சான்று காலம் முடிவடைய இருப்பதால் தேவையான பழுதுநீக்கம் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மீண்டும் தகுதிச் சான்று பெற வேண்டும். இதற்கான செலவீனத்திற்கு மன்றம் தனது தீர்மான எண் 387 நாள் 31–7–07ல் அனுமதி அளித்துள்ளது இதன் பேரில் 11–6–08ல் விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று அரசு அஙகீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

1.. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங ஒர்க்ஸ் போல்பேட்டை, தூத்துக்குடி — ரூ 30,050/–

2. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ், கால்டுவெல்காலனி, தூத்துக்குடி — ரூ 31,050/–

3. மெசர்ஸ் ஆர் என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ் சிதம்பர நகர், தூத்துக்குடி — ரூ 30,975/–

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

கழிவுநீர் லாரியின் இயக்ககம் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி ரூ 30,050/– கொடுத்துள்ள மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் அன்ட் இஞ்சினியரிங ஒர்க்ஸ் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

இ1. 12843/08

**<u>தீர்மானம் எண்: 362</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

46. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி லெவஞ்சிபுரம் OHT ல் வால்வு அமைக்கும் பணி பொது நிதியில் செய்ய 25–4–2008 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு ஜே. விஜயன் | மதிப்பீட்டிற்கு ரூ 0.01% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு சி. ரவி | மதிப்பீட்டிற்கு ரூ 0.23% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 277 தேதி 17–8–2005ல் ரூ 23,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.01% குறைவானதுமான திரு ஜே. விஜயன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம். மபஎண் 38/2005–06

**தீர்மானம் எண்: 363**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

47. இந்நகராட்சிப் பகுதி மில்லர்புரம் நீர்த்தேக்கத்தொட்டியிலிருந்து டோபிகானா பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய் பதிக்கும் பணி பொதுநிதியின் கீழ் செய்ய 13–6–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு ஜே. விஜயன் | மதிப்பீட்டிற்கு ரூ 0.21% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு சி. ரவி | மதிப்பீட்டிற்கு ரூ 0.22% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 191 தேதி 25–4–2008ல் ரூ 3,00,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.21% குறைவானதுமான திரு ஜே. விஜயன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 256/2007–08

**தீர்மானம் எண்: 364**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

48. தமிழக அரசாணை எண் 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறை நாள் 12–11–2007ன்படியும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.63012/ஆர்1 நாள் 20–02–08ல் சொத்துவரி சீராய்வு பணி 1–4–08 முதல் மேற்கொள்வது தொடர்பாக வரப்பெற்றுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி குடியிருப்பு கட்டிடஙகளுக்கு 25%, வணிக பயன்பாடு கட்டிடஙகளுக்கு 150%, தொழிற்சாலை பயன்பாடு கட்டிடஙகளுக்கு 100% உச்ச வரம்புக்கு மிகாமலும் நிர்ணயம் செய்ய நகர்மன்றத் தீர்மான எண் 234 நாள் 23–05–08ன்படி அனுமதியளிக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது வரப்பெற்றுள்ள அரசாணை எண் 110 நாள் 23–06–08ல் சொல்லப்பட்ட தெளிவுரைகளின்படி சொத்துவரி சீராய்வு பணி மேற்கொள்வது தொடர்பான உச்சவரம்பினை அந்தந்த நகர்மன்றமே முடிவு செய்யலாம் என்பது தொடர்பான அரசாணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) பதிவு செய்யலாம்.

2) இந்நகராட்சியின் முக்கிய வருவாய் சொத்துவரியாகும். இந்நகராட்சியின் வரி மற்றும் வரியில்லா இனஙகள் மூலம் ஆண்டுக்கு 10.38 கோடி வருவாய் கிடைக்கிறது.

3) மேற்கண்ட வருவாயில் பணியாளர் ஊதியம், குடிநீர் பராமரிப்பு, தெருவிளக்கு பராமரிப்பு, மின் கட்டணம், வாகன பராமரிப்பு, எரிபொருள் செலவினம் போன்ற இதர செலவினஙகளுக்கு மட்டும்

ரூ.836.64 லட்சம் செலவிடப்படுகிறது. பணியாளர்களின் அகவிலைப்படி உயர்வு இதர பராமரிப்பு செலவினங்கள் உயர்ந்து கொண்டே செல்கிறது.

4) மேற்கண்டவாறு வரி உயர்வு செய்யும் பொழுது இந்நகராட்சியின் அரையாண்டு சொத்துவரி ரூ.327 லட்சத்திலிருந்து ரூ.550 லட்சமாக உயர வாய்ப்புள்ளது. ஏறத்தாழ ரூ.225 லட்சங்களின் அதாவது ஒரு வருடத்திற்கு ரூ.450 லட்சம் வருவாய் உயர்வு செய்தும், கடன் எதுவும் பெறாமல் சாலைகள் அமைத்தல், வடிகால் அமைத்தல், குடிநீர் மேம்பாடு, தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள் ஆகியவற்றை நகராட்சி நிதியிலிருந்தே மேற்கொள்ள வழிவகை ஏற்படும். மேலும் குடிநீர் அபிவிருத்திக்காக பெறப்பட்ட கடன் வணிகவளாகம் கட்டுமான கடன், சாலைகள் அமைக்க பெறப்பட்ட UIDSSMT கடன் ஆகியவற்றை வட்டியுடன் ஒவ்வொரு வருடமும் முறையாக செலுத்தி வரவும் இயலும்.

5) இந்நகராட்சியில் பாதாளச் சாக்கடைத்திட்டம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அதற்கான நகராட்சிப் பங்குத்தொகை ரூ.1000 இலட்சங்கள் செலுத்த வேண்டியுள்ளது. பக்கிள் ஓடை சீரமைப்பிற்கு தேவையான மொத்த மதிப்பீட்டில் நகராட்சியின் பங்குத் தொகையும் செலவிட வேண்டியுள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட தவிர்க்க இயலாத செலவினங்களை கருத்திற்கொண்டும் மக்களின் வளர்ச்சிப் பணிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்த வேண்டியுள்ளதை கருதியும் இந்நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட உள்ள நிலையில், மக்களின் அனைத்து சேவைகளையும் திறம்படவும், துரிதமாகவும் பொது நிதியிலிருந்து கொண்டு செயலாற்ற வேண்டி உள்ளதால் அதற்கேற்ப, வரி உயர்வு உச்சவரம்பினை நிர்ணயம் செய்யலாம்.

அ1. 24425/07

**<u>தீர்மானம் எண் : 365</u>**

அரசாணை எண் 110 நாள் 23.06.08 பதிவு செய்யப்பட்டது. மேலும் சொத்துவரி சீராய்வில் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 25% வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு 50% தொழிற்சாலை பயன்பாடு கட்டிடங்களுக்கு 100% என வரி உயர்வு உச்ச வரம்பு நிர்ணயம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

49. இந்நகராட்சி புதிய பேரூந்து நிலைய கடை எண் 74ன் உரிமத்தினை அரசாணை எண் 92 நாள் 3–7–2008இன்படி திரு செந்தில்குமார் என்பவர் பெயரில் இருந்து திரு சங்கரன் என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேலும் திரு செந்தில்குமார் என்பவர் பெயரில் ஏற்கனவே நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்த கடை எண் 36 மற்றும் 79க்கு வாடகை நிலுவை ரூ 8,40,933/– நிலுவை உள்ளது. எனவே சங்கரன் என்பவர் தொடர்ந்த வழக்கு எண் W.P. 482/08ல் நகராட்சி சார்பாக வழக்காட திரு எஸ். கடற்கரை வழக்கறிஞரை நியமனம் செய்யவும் அது வகைக்குரிய செலவுத்தொகையை செலவு செய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 48586/01

**<u>தீர்மானம் எண் : 366</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

50. இந்நகராட்சிக்கு சொந்தமான வி.இ. ரோடு கடை எண் 495, 496 ஆகிய இரு கடைகள் நகராட்சி அனுமதியில்லாமல் 10/2000ல் மராமத்து செய்து புதுப்பிக்கப்பட்டது. நகராட்சி அனுமதி இல்லாமல் கடை புதுப்பிக்கப்பட்டது தொடர்பாக இந்நகராட்சி சார்பாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கு எண ஓ.எஸ். எண் 24 & 25/2001ன் தீர்ப்பில் கடையை காலி செய்ய முழு அதிகாரம் நகராட்சிக்கு இருந்தும் கடையை காலி செய்ய எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவித்து வழக்கு தள்ளுபடி செய்து உத்திரவிடப்பட்டது. இந்நிலையில் கடை உரிமம் பெற்ற திரு இஸ்ரவேல் காலமாகி விட்டதால் அன்னாரின் மனைவி திருமதி ராஜம்மாள் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேற்படி கடையை காலி செய்யக்கூடாது என தொடர்ந்த வழக்கு எண் W.P 15540/2003 தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்பட்டது. எனவே மேற்படி இரு கடைகளுக்கும் கட்டிடம் புதுப்பிக்கப்பட்ட நாள் முதல்வாடகை மறு நிர்ணயம் செய்யப்படாததால் தற்போது வருவாய் ஆய்வாளரின் அறிக்கைப்படி மார்கெட் வாடகை அடிப்படையில் ஒரு கடைக்கு வாடகை தரைத்தளம் ரூ 3000/– எனவும் முதல் தளம் ரூ 3000/– எனவும் விஇ.ரோடு கடை எண் 495 மற்றும் 496 ஆகிய இரு கடைகளுக்கும் 10/2000 முதல் வாடகை நிர்ணயம் செய்ய மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 25224/2000

**<u>தீர்மானம் எண்: 367</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

51. இந்நகராட்சிக்கு சொந்தமான வி. இ. ரோடு வ.உசி சந்தையில் உள்ள காலி உள்ள இடத்தில் நகராட்சி அனுமதியில்லாமல் நான்கு கடைகள் கட்டப்பட்டுள்ளது. மேற்படி நான்கு கடைகளை நகராட்சி கையகப்படுத்தி நகராட்சி சொத்தாக கருதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் மூன்றாண்டு குத்தகை அடிப்படையில் உரிமம் வழஙக நடவடிக்கை எடுக்க மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 11574/2006

**<u>தீர்மானம் எண்: 368</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

52. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள வி.இ. சாலையில் மற்றும் ஜார்ஜ் சாலை இரண்டும் சந்திக்கும் ரோட்டில் வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 3,15,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 21/2008–09

**<u>தீர்மானம் எண்: 369</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

53. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள வார்டு எண் 3, சுந்தரராமபுரம் தெருவில் பாலம் பணி முடிவு பெற்றுள்ளது. அதன் உட்பகுதியில் சாலையுடன் இணைக்க இருபக்கமும் Wing walls (பக்க சுவர்) கட்டி கிழக்கு பக்கம் Ramp கட்டவும் பாலத்தின் இருபக்கம் கிராவல் நிரப்பி கல்சாலை மற்றும் தார்சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ 4,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 35/2008–09

**<u>தீர்மானம் எண்: 370</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

54. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள புதிய பேரூந்து நிலையம் முன்பு தற்போது நெடுஞ்சாலைத்துறையின் மூலம் மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மேற்கண்ட சாலையின் மேற்குபக்கம் அமைய உள்ள சர்வீஸ் ரோட்டிலுள்ள வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணியினை போக்குவரத்து அவசரம் கருதி உடன் செய்ய வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணியினை நகராட்சி சட்டவிதி 15–ன் கீழ் மதிப்பீடு விலை விகிதத்தில் செய்து முடித்து ரூ 40265/– (ரூபாய் நாற்பதாயிரத்து இருநூற்று அறுபத்தைந்து மட்டும்) செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்: 371</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

55. இந்நகராட்சியின் பராமரிப்பிலுள்ள புதிய பேரூந்து நிலையம் முன்புறம் நெடுஞ்சாலைத்துறையினரால் மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மேற்கண்ட இடத்தில் சர்வீஸ் ரோடு அமைய உள்ள இடத்தில் சிறுபாலம் அமைக்க வேண்டி உள்ளது. போக்குவரத்து அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டவிதி எண் 15–ன் கீழ் மதிப்பீடு விலை விகிதத்தில் செய்து முடித்து செலவினம் ரூ 58,052/– (ரூபாய் ஐம்பத்தெட்டாயிரத்து ஐம்பத்திரண்டு மட்டும்) மேற்கொள்ளப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்: 372</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

56. இந்நகராட்சியின் பராமரிப்பிலுள்ள வல்லநாடு நீர்த்தேக்க நிலையத்தில் தற்போது புதியதாக 800 கேவி டிரான்ஸ்பார்மர் (மின் மாற்றி) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதில் 175எச்பி மோட்டார் அறையில் புதியதாக பேனல் போர்டு மற்றும் Bus Bar அமைக்கத் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 3,00,000/–க்கு (ரூபாய் மூன்று இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

மபஎண் 26/2008–09

**<u>தீர்மானம் எண்: 373</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

57. இந்நகராட்சியில் கடந்த மழை வெள்ள காலத்தில் ஸ்டேட் பாங்க் காலனியை சுற்றியுள்ள பகுதியில் தேஙகியிருந்த வெள்ள நீரை JCB இயந்திரம் மூலம் வடிகால் அமைத்து மழைநீரை வடித்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 28,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 24/2008–09

**<u>தீர்மானம் எண்: 374</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

58. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள பழைய மற்றும் புதிய பேரூந்து நிலையத்தில் மராமத்து செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 43,000/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 27/2008–09

**<u>தீர்மானம் எண்: 375</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

59. இந்நகராட்சி 9வது பிரிவுக்குட்பட்ட நீதிமன்ற வளாகம் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் தேஙகியிருந்த மழைநீரை டேஙகர் லாரிகள் மூலம் அப்புறப்படுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 24,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 29/2008–09

**<u>தீர்மானம் எண்: 376</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

60. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள முத்துகிருஷ்ணாபுரம் 4, 5, 6 வது தெருக்களில் மழைநீர் வடிகால் உயர்த்தி கட்டுதல் மற்றும் சிறுபாலம் கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ 2,10,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 34/2008–09

**<u>தீர்மானம் எண்: 377</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

61. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள டி.ஆர். நாயுடு தெருவில் மழைநீர் வடிகால் உயர்த்தி கட்டுதல் மற்றும் புதியதாக சிறுபாலம் கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ 58,000/–க்கு (ரூபாய் ஐம்பத்தெட்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 33/2008–09

**<u>தீர்மானம் எண்: 378</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

62. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள வார்டு எண் 10ல் பூபாலராயர்புரம் சந்திப்பு சாலையில் புதிதாக சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 30,000/–க்கு (ரூபாய் முப்பதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 36/2008–09

**<u>தீர்மானம் எண்: 379</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

63. இந்நகராட்சியில் உள்ள சொத்துவரி, குடிநீர்க் கட்டணம், தொழில் வரி ஆகிய நிலுவை கேட்பு பதிவேடுகளை 2005–06ஆம் ஆண்டுக்கு எடுத்து எழுதுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் நகஎண் கே3. 31628/2007 நாள் 2–6–2007ன்படி 2007–08ஆம் ஆண்டு நிலவர விலை விகிதப்படி நபர் 1க்கு நாள் 1க்கு ரூ.60/– வீதம் தினக்கூலி அடிப்படையில் நான்கு நபர்களை அமர்த்திக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ 21600/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** 1. அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி உதவி இயக்குநர் தணிக்கை தூத்துக்குடி அவர்களது நேரடி அறிவுறுத்தலின் பேரில் 2005–06ஆம் ஆண்டுக்கு மேற்கூறிய இனஙகளுக்கு நிலுவை கேட்பு பதிவேடு எடுத்து எழுதி பணி முடித்ததையும் அனுமதிக்கலாம்.

அ1/5068/08

**<u>தீர்மானம் எண்: 380</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

64. தூத்துக்குடி நகர்பகுதி தெற்கு காட்டன் ரோடு பகுதியில் சிறுவர் இல்ல மேல்நிலை தொட்டிக்கு செல்லும் 300 எம்எம் ஏ.சி பம்பிங மெயினில் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வீணாவதை உடன் சரி செய்ய நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ் நகராட்சி பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர் திரு ஜி.பார்த்தீபன் என்பவர் மூலம் உடன் பணி செய்து முடித்ததற்கும் அதற்கான செலவினம் ரூ 34,674/– மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** பதிவு செய்யலாம்

மபஎண் 6/2008–09

**<u>தீர்மானம் எண்: 381</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது